செ.வெ.எண்:48 நாள்:17.09.2021

# கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு பெற்றோரில் ஒருவரை இழந்த 19 குழந்தைகளுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.57 இலட்சம் மதிப்பிலான காசோலைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் வழங்கினார்.

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (17.09.2021) கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு பெற்றோரில் ஒருவரை இழந்த குழந்தைகளுக்கு தலா ரூ.3 இலட்சம் வீதம் 19 குழந்தைகளுக்கு மொத்தம் ரூ.57 இலட்சம் மதிப்பிலான காசோலைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த பெற்றோர்களின் குழந்தைகள் மறுவாழ்வு மற்றும் பாதுகாப்பிற்காக நிதியுதவிகள் அறிவித்துள்ளார். அதன்படி பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு அவர்களின் பெயரில் ரூ.5 இலட்சம் வைப்புத் தொகையாகவும், பெற்றோரில் ஒருவரை இழந்த குழந்தைகளுக்கு ரூ.3 இலட்சம் வைப்புத் தொகையாக வரவு வைக்கப்பட்டு அவர்கள் 18 வயது முடிவடைந்தவுடன் வட்டியுடன் சேர்த்து வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முதற்கட்டமாக கோவிட் பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டு பெற்றோரில் ஒருவரை இழந்த 39 குழந்தைகளுக்கு தலா ரூ.3,00,000/- வீதம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து அவர்தம் வங்கி கணக்கிற்கு ECS மூலம் நேரடியாக செலுத்தப்பட்டது.

தொடர்ந்து, ECS மூலம் செலுத்தும் நடைமுறை மாற்றப்பட்டதைத் தொடர்ந்து 2-ம் கட்டமாக பெற்றோரில் ஒருவரை இழந்த 19 குழந்தைகளுக்கு தலா ரூ.3,00,000/- வீதம் காசோலையாக பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திரு.சரவணன் உடன் இருந்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**